SNS academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

**மாதத்தேர்வு - டிசம்பர் 2019**

**வகுப்பு**: ஆறு **மதிப்பெண்கள்**: 40

**பாடம்**: தமிழ் **தேதி:**

**அ. விடை தருக. (4x4=16)**

i. தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?
ii. நீங்கள் வசிக்கும் பகுதியில் நடைபெறும் தொழில்களில் ஒன்றைக்குறித்து ஐந்து வரிகள் எழுதுக.
iii. சிறுவணிகம், பெருவணிகம் வேறுபடுத்துக.
iv. பழந்தமிழர் ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருட்கள் யாவை?

**ஆ. கடிதம் எழுதுக. 7**

உமது பகுதிக்கு தெருவிளக்கு வசதி வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக. ( **உமது முகவரி** : குமரன் / குமாரி, எண். 32- சக்தி நகர், மதுரை – 20)

**இ. விடுபட்ட சீர்களை எழுதுக. 2**

வெள்ளத்து அனைய ___________ மாந்தர்தம்
___________ அனையது உயர்வு.

**ஈ. விடை தருக. 10**

i. ஒன்றினை சுட்டிக் காட்ட வரும் எழுத்துகள் __________.
ii. தமிழில் உள்ள சுட்டெழுத்துகள் _______________________.
iii. மொழியின் முதலிலும், இறுதியிலும் வரும் வினா எழுத்து ______.
iv. வினா _________, _____________ என இருவகைப் படும்.
v. அந்த நிலா என்பது ________________ சுட்டு.
vi. சொல்லின் உள்ளேயே இருந்து சுட்டுப் பொருளைத் தருவது ____.
vii. பேங்க்- என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம் ___________.
viii. பண்டம்+மாற்று- சேர்த்து எழுதக் கிடைப்பது ______________.
ix. மூச்சடக்கி- பிரித்து எழுதக் கிடைப்பது __________.
x. கலம் என்பதன் பொருள் _____________.

**உ. பத்தியைப் படித்து விடை தருக. 5**

திருக்குறளிலே ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பாட்டும் 2 அடிகளைக் கொண்டது. இரண்டு அடிகளைக் கொண்ட வெண்பாவிற்குக் குறள் வெண்பா என்று பெயர். இந்நூலின் பாடல்கள் முழுவதும் குறள் வெண்பாக்களால் ஆகியிருப்பதால் இந்நூலுக்கு ‘குறள்’ என்று பெயர் வந்தது. இதன் சிறப்பைக் குறிக்கத் ‘திரு’ என்ற அடைமொழி சேர்ந்தது. இதில் உள்ள அதிகாரங்கள் 133. முதற்பால் முப்பத்தெட்டு அதிகாரங்களைக் கொண்டது. முதல் நான்கு அதிகாரங்கள் பாயிரம் ஆகும். அதன் பின் இருபது அதிகாரங்கள் இல்லறத்தைப் பற்றி கூறுகின்றன. பதிமூன்று அதிகாரங்கள் துறவறத்தைப் பற்றிக் கூறுகின்றன. ஒரு அதிகாரம் ஊழ்வினையைப் பற்றி உரைக்கின்றது.

**வினாக்கள்**

i. குறள் வெண்பா எத்தனை அடிகளை உடையது
அ) மூன்றடிகள் ஆ) நான்கடிகள்
இ) இரண்டு அடிகள் ஈ) ஐந்தடிகள்

ii. திருக்குறளில் திரு என்பது
அ) பழமை கருதி சேர்க்கப்பட்டது
ஆ) சிறப்பு கருதி சேர்க்கப்பட்டது
இ) வள்ளுவரின் ஊர் பெயர் என்பதால் சேர்க்கப்பட்டது
ஈ) இரண்டு அடிகள் உடையது என்பதால் சேர்க்கப்பட்டது.

iii. முதற்பாலில் மொத்தம்
அ) 32 அதிகாரங்கள் உள்ளன
ஆ) 34 அதிகாரங்கள் உள்ளன
இ) 38 அதிகாரங்கள் உள்ளன
ஈ) 35 அதிகாரங்கள் உள்ளன

iv. ஊழ்வினையின் வலிமை பற்றி
அ) 20 அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளன.
ஆ) 13 அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளன
இ) 4 அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளன
ஈ) ஒரு அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

v. திருக்குறளில் முதற்பாலின் முதல் நான்கு அதிகாரங்கள்
அ) இல்லறம் பற்றிக் கூறும்
ஆ) துறவறம் பற்றிக் கூறும்
இ) பாயிரம் ஆகும்
ஈ) ஊழ்வினையின் வலிமை பற்றி கூறும்